
உ

சிவமயம்



நயினாதீவு

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில்

உள்வீதி சுற்றுப்பிரகாரத்

# தோத்திரப் பாக்களின் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நயினாதீவு

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

உள்வீதி சுற்றுப்பிரகாரத்

# தோத்திரப் பாக்களின் தொகுப்பு

( சக்தி உபாசகர்கள் மனனம் செய்தற்குரியவை )

பதிப்புரிமை:- அறங்காவலர் சபைக்குரியது

வெளியீடு:- அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு.

வெளியீடு:- 1 1998 - 06 - 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

''போற்றி என் வாழ்முதலாகிய பொருளே''

அம்பாளைத் தரிசிக்க வரும் அடியார்கள் அன்னையின் அருட்பொலிவில் தம்மை மறந்து நின்று கண்ணீர் மல்கி, பிரார்த்தனை செய்தபின் உள்வீதிச் சுற்றுப் பிரகாரத்தில் எழுதப்பட்டிருக்கும் தெய்வீகப் பாடல்களில் தம்மையே மறந்து நின்று, பாடிப் பரவும்போதும் சிறு சிறு காகிதங்களில் அவற்றை எழுதிக்கொண்டிருந்த போதும், அவதானித்த நான், இப்பாடல்களைப் புத்தக வடிவில் அச்சிட்டு சிறு தொகைப் பணத்திற்கு வழங்கினால் நல்லது எனக் கருதினேன். எனது கருத்தை அறங்காவலர் சபையினரும் மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். இந்தவகையில் முதல் பதிப்பாக இச்சிறிய வெளியீடு அடியார்கள் கரங்களில் கிடைக்கின்றது. இதனைப் பெற்று அடியார்கள் மனநிறைவு கொள்வார்கள் என்பது எமது நம்பிக்கை. எமது இரண்டாவது வெளியீடாக திருக்குடமுழுக்கு விழாப் பாடல் தொகுதியும், மூன்றாவது வெளியீடாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தல வரலாறும் (மும்மொழிகளில்) நான்காவது வெளியீடாக அன்னைமேல் கவிஞர்களால் பாடப்பட்ட அருட்கவிப் பாமாலையும் வெளிவரவிருக்கின்றதென்பதையும் மகிழ்வுடன் அறியத்தருகின்றேன்.

'' தாயேயாகி வளர்த்தனை போற்றி ''.

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு.

ஆ. தியாகராசா
தலைவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நயினாதீவு, ஸ்ரீ நாகபூஷணி அம்மன் உள்வீதி சுற்றுப்பிரகாரத்

# திருமுறைத் தோத்திரப் பாக்கள்

( சக்தி உபாசகர்கள் மனனம் செய்வதற்குரியவை )

## விநாயகர் துதி

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு.

கும்பமாமுனியின் கரகநீர் கவிழ்த்துக்
குளிர்மலர் நந்தனங் காத்துச்
செம்பொனாட் டிறைவர்க்கு அருளிய
நினது திருவருட் பெருமையை மறவேன்
நம்பினார்க்கினிய அருண் மகப்பேறே
நற்குணத்தோர் பெரு வாழ்வே
வம்பறா மலர்த்தார் மழைமுகிற் கூந்தல்
வல்லபைக் கணேச மாமணியே.

## தேவாரம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கி யாதுமோர் குறைவில்லைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே.

அன்னம் பாலிக்குந் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

வந்தமணலாலிங்க மண்ணியின் கட்பாலாட்டும்
சிந்தைசெய் வோன்றன்றன் கருமந்தேர்ந்து சிதைப்பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.

## திருத்தாண்டகம்

எழுந்ததிரை நதித்திவலை நனைந்த திங்கள்
இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே
கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி
கொங்கையிணை அமர்பொருது கோலங்கொண்ட
தழும்புளவே வரைமார்பில் வெண்ணூலுண்டே
சாந்தமொடு சந்தனத்தின் அளறுதங்கி
அழுந்திய செந்திருவுருவில் வெண்ணீற்றானே
அவனாகில் அதிகை வீரட்டனாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நுடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள் தோய் சுவடு
பொடிகொள்வான் தழலிற் புள்ளிபோல் இரண்டு
பொங்கொளி தங்குமார் பின்னே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அடிகளே அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே.

— மாணிக்கவாசகர்

## திருவிசைப்பா

அம்பரா அனலா அனிலமே புவிநீ
அம்புவே இந்துவே இரவி
உம்பரா லொன்று மறியொணா வணுவா
யொழிவற நிறைந்த வொண் சுடரே
மொய்ம்பராய் நலஞ்சொன் மூதறிவாளர்
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
யெம்பிரானாகி யாண்டநீ மீண்டே
யெந்தையுந் தாயுமாயினையே.

- கருவூர்த்தேவர்

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின் கண்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடி குடி
யீசற்காட் செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள
வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

— சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னா மம்என்னா வில்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டா னத்துறை யம்மானே.

கைப்போது மலர் தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர் தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

– நாவுக்கரசர்

நங் கடம்பனை பெற்றவள் பங்கினன்
தென் கடம்பை திருக்கரைக் கோயிலான்
தன் கடன்அடி யேனையும் தாங்குதல்
என் கடன்பணி செய்து கிடப்பதே.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்
ஆனாயுனக் காளாயினி யல்லே னெனலாமே. [டுறையுள்

- சுந்தரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாகக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயாஎன் னாருயிரே அம்பலவா என்றவன்தன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெடடல் இன்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்(கு)
ஊன் கெட்டு உயிர்கெட்டு உணர்வு
கெட்டென் உள்ளமும் போய்
நான் கெட்டவா பாடித்
தெள்ளேணங் கொட்டாமோ.

வணங்கத் தலைவைத்து வார்கழல்
வாய் வாழ்த்த வைத்து
இணங்கத் தன் சீரடியார்
கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை
அம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூரப் பாடி நாம்
பூவல்லி கொய்யாமோ.

நானே பொய்என் நெஞ்சும் பொய்
என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனை வந்துறுமாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பர் புராணம்

அம்பிகைசெம் பொற்கிண்ணத் தமுதளூ
னங் கொடுப்ப வழுகை தீர்ந்த
செம்பவள வாய்ப்பிள்ளை திருநாவுக்
கரசரெனச் சிறந்த சீர்த்தி
எம்பெருமக் களுமியைந்த கூட்டத்தி
லரனடியா ரின்ப மெய்தி
உம்பர்களும் போற்றிசைப்பச் சிவம் பெருகு
மொலி நிறைத்தா ருலகமெல்லாம்

- சேக்கிழார்

## அம்பிகை புராணம்

காரொழுகுங் குழலாளை கருணை வடிந்தொழுகும்
இருகடைக் கண்ணாளை
ஊரலிள நிலவெறிப்ப அழகொழுகப்
புனுகொழுகும் முகத்தினாளை
வாரொழுகுந் தனத்தாளை வடிவொழுகித்
தெரிவரிய மருங்குலாளை
சீரொழுகும் பதத்தாளை அருணை உண்ணா
முலையாளைச் சிந்தை செய்வாம்.

## திருமந்திரம்

வாயு மனமுங் கடந்த மனோன்மணி
பேயுங் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவுங் கடந்த அரனுக்குத்
தாயும் மகளுநல் தாரமுமாமே.

ஏடங்கை நங்கை இறை எங்கள் முக்கண்ணி
வேடம் படிகம் விரும்பும் வெண்டாமரை
பாடுந் திருமுறை பார்பதி பாதங்கள்
சூடுமின் சென்னிவாய்த்தோத்திரஞ் சொல்லுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

வேத வித்தகா சாமீ நமோ நம
வேல்மி குத்தமா சூரா நமோ நம
விம சக்ரயூ காளா நமோ நம - விந்துநாத
வீர பத்மசீர் பாதா நமோ நம
நீல மிக்ககூ தாளா நமோ நம
மேக மொத்தமா யூரா நமோ நம - விண்டிடாத
போத மொத்தபேர் போதா நமோ நம
பூத மற்றுமே யானாய் நமோ நம
பூர ணத்துளே வாழ்வாய் நமோ நம - துங்கமேவும்
பூத ரத்தெலாம் வாழ்வாய் நமோ நம
ஆறி ரட்டிநீள் தோளா நமோ நம
பூஷ ணக்குமா மார்பா நமோ நம - புண்டரீக
மீதி ருக்குநா மாதொடு சேயிதழ்
மீதி ருக்குமே ராம்மாபு லோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் - நின்றுநாளும்
வேத வித்தகி வீமா விராகினி
விறு மிக்கமா வீணா கரேமக
மேரு வுற்றுவாழ் சரே சிவாகரெ - யங்கராகி
ஆதி சத்திசா மாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீணாக பூஷணி
ஆயி நித்தியே கோடிர மாதவி - யென்றுதாழும்
ஆர்யை பெற்றசீ ராளா நமோ நம
சூரை யட்டுநீள் பேரா நமோ நம
ஆர ணத்தினார் வாழ்வே நமோ நம - தம்பிரானே.

- அருணகிரிநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தவார் குழல் கோதி மாலையைப் புனைந்து
மஞ்சலா வழகாக மேனிற் றிமிர்ந்து
கண்ட மாலைகளான ஆணிமுத்தணிந்து - தெருவூடே
கண்டபேரை யெலா மவாவினிற் கொணர்ந்து
வண்ப யோதரபார மேருவைத் திறந்து
கண்களாகிய கூரவேலை விட்டெறிந்து - விலைகூறி
வந்த பேர்களையே கையாலெடுத் தணைத்து
கொண்டு மேனி மூறுவாயை வைத்திருத்தி
மந்த மாருதம் வீசு பாயலிற்புணர்ந்து மயல்பூசை
மங்கை மாரநுபோக தீவினைப் பவங்கள்
மங்கியே கிடுமாறு ஞானவித்தை தந்து
வண்டுலாவிய நீப மாலைசற்றிலங்க - வருவாயே
இந்திர தாருவை ஞால மீதிற் கொணர்ந்த
சங்க பாணியனாதி கேசவ பரசங்கனென்று
வாழ் மணிமார்மன் வரவிக்ரமன்றன் - மருகோனே
எண்டிசை சாமுகவேலை ஞால முற்றுமண்டு
சுந்தர்ரு சேனை நீறு பட்டொதுங்க
வென்று பேரொளி சேர்ப்ரகாசம் விட்டிலங்கு – கதிர்வேல்
சந்திரசேகரி நாகபூஷணத்திய யண்டமுண்ட
நாரணிபால் போஜனத்தியம் பைதந்த
பூரண ஞானவேள் குறத்தி துஞ்சு - மணிமார்ப
சண்டநீல கலாப வாசியிற்றிகழ்ந்து
தஞ்சன் வாசன் மேவிவாழ் பதிக்குயர்ந்த
தஞ்சைமாநகர ராஜ கோபுரத்தமர்ந்த - பெருமாளே.

- அருணகிரிநாதர்

வாதினை அடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம தொழிந்து – தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து - பணியேனே
ஆதியோடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று - தெரியேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனதனி மந்ர ரூபநிலை கொண்ட
தாடுமயிலென்ப - தறியேனே
நாதமொடு விந்து வாகியுடல் கொண்டு
நானிலமலைந்து - திரியாதே
நாகமணி கின்ற நாதநிலை கண்டு
நாடிஅதில் நின்று - தொழுகேனே
சோதி உணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோஹமது தந்து - எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற - பெருமாளே.

## கந்தரநுபூதி

உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவினோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

யாமோ தியகல் வியுமெம் மறிவுந்
தாமே பெறவே லவர்தந் ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே.

எந்தா யுமெனக் கருள் தந்தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கந்தரலங்காரம்

சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட்டு அழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட்டு அழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்பும் அவன்
கால்பட்டு அழிந்ததிங் கென்தலை மேலயன் கையெழுத்தே.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மானந்தத்தே
தேங்கார் நினைப்பும் மறப்பும் அறார் தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யாரென்செய் வார்யம தூதருக்கே.

## அபிராமி அந்தாதி

மணியே மணியி னொளியே
யொளிரு மணிபுனைந்த
அணியே யணியு மணிக்கழ
கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே
யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம
பாதம் பணிந்த பின்னே.

பின்னே திரிந்துன் னடியாரைப்
பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்
டேன் முதல் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி
யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற
வாமனின் றேத்துவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமங் கடம்பு படைபஞ்ச
பாணம் தனுக் கரும்பி
யாமம் வயிரவர் ஏத்தும்
பொழுது எமக்கென்று வைத்த
சேமம் திருவடி செங்கைகள்
நான்கு ஒளி செம்மையம்மை
நாமம் திரிபுரை ஒன்றோடு
இரண்டு நயனங்களே.

தனம் தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனம் தரும் தெய்வ வடிவும் தரும்
நெஞ்சில் வஞ்சமில்லா
இனம் தரும் நல்லன வெல்லாம் தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே.

ஆத்தாளை எங்கள் அபிராம
வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத்
தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்
குசமுங் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்
தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே.

பூத்தவளே புவனம் பதி
னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே
கறைக் கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா
முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை யன்றி
மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற் றொடையின்
பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகு நறுஞ்சுவையே
அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற் கேற்றும்
விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும் இளமென்
பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில்அழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே
மதுகரம் வாய்
மடுக்குங் குழற் காடேந்து மிளவஞ்சிக்
கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெருவாழ்வே
வருக வருகவே,

பெருந்தேன் இறைக்கும் நறை கூந்தற்
பிடியேவருக முழுஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்பெம்
மான்முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக மும்முதற்கும் வித்தே
வருக வித்தின்றி
விளைக்கும் பரமானந் தத்தின் விளைவே
வருக பழமறையின்
குருந்தே வருக அருள் பழுத்த
கொம்பேவருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம் குடைவார்
பிறவிப்பெரும் பிணிக்கோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தே வருக பசுங்குதலை மழலைக்
கிளியே வருகவே
மலயத்துவசன் பெற்ற பெரு வாழ்வே
வருக வருகவே

## அபிராமி பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்புமுதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டுகண்டாய்
அலையாளி அறிதுயில் கொள்மாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

## நாகபூஷணி அம்பாள் துதி

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என்இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக் கெல்லா உயிர்களுமே சொந்தமென்ற
உண்மையை நான்ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தீயர் தாமும்
சீலமுறவேண்டு மென்றே வேண்டுகின்றேன்
தனக் கொருவரொப் பில்லாத்தாயே! இந்தத்
தாரணியில் சாந்தியையே தருவாய்நீயே.

நயினை க. இராமச்சந்திரன்

## நயினை மான்மியம்

பெற்றதா லன்னை பெறுமுயி ரனைத்தும்
பேணலா லன்னை பெற்றிடுவோர்
உற்றதா லன்னை விரும்பிய அனைத்தும்
உதவலா லன்னை எக்கலையும்
செற்றதா லன்னை உலகொடு வானுந்
தொழுதலா லன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலா லன்னை
பராபரை நாக பூடணியால்.

- நயினை நாகமணிப்புலவர்.

## தோத்திரத்திரட்டு

மங்கல மணம்பரவு மலர்தலைக் காலைபோல்
மனமாயவிருள் போக்குவாய்
மாசிலாத் தென்றல்போல் வந்தெனது சோர்வினை
மாற்றிமனவீறு தருவாய்
பொங்குதிரை ஆழிபோல் என்னுள்ளம் பூரிக்கப்
பொதுவேத முரசொலிப்பாய்
புண்பட்ட நெஞ்சிலே வெண்பட்டு நிலவெனப்
போந்துசாந்தம் அளிப்பாய்
செங்கதிர் ஞாயிறென வேயெனது சித்தமிசை
திவ்யஞானம் பொழிகுவாய்
சிங்கமென வீரமும் திருமூலர்யோகமும் திருக்குறளின்
வாழ்வும் அருளாய்
துங்கமிகு நயினையில் தங்கியே புவனந்தனைக்
காத்து அருள்அன்னையே
சதாசிவ மனோன்மணி சிதாகாச ஓம்சுத்தசக்தியே
போற்றி போற்றி.

- சுத்தானந்த பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்த மண்டபத்தின் இருமருங்குமுள்ள பாடல்கள்

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி எழில்
புங்கவி விளங்கு சிவ சங்கரி
சகஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே உச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணி எனப்புகழ
அகிலாண்ட கோடி ஈன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்தரூப மயிலே
வாரணியும் இரு கொங்கை மாதர்மகிழ்
கங்கை புகழ் வளமருவு தேவை அரசே
வரைராச னுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர் காதலிப்பெண் உமையே.

- தாயுமானசுவாமிகள் -

சந்திரை ரவி கௌரி அக்கணியு முக்கணீ
சடாதரி சடாட்சரத்தி சங்கரி சுமங்கலி
மதங்கியரு ளம்பிகை சவுந்தரி சண்ட சண்டி
உத்தமி பராபரை மனோன்மணி சிவானந்தி
யுமையிமைய முதவுமங்கை உலகுதவு மன்னையா
மளை பொன்னினம்பலவ ருடனிடமகிழ்ந்து மேவு
நித்திய கல்யாணி சாம்பவி புவன கௌமாரி
நிமல மகமாயி யென்றே நெஞ்சில் நிதமுந் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்துனை வணங்கவரு நின்னடியவர்க் கருளுவாய்
நத்துலவு சுத்தமணி மெத்து நயினா நகரில்
நாளுமுறை யாழின் மொழியே நாகமணியும் பரமர்
பாகமுறு மேகசிவ நாக ஈஸ்வரி யம்மையே:

- வரகவி திரு. சி முத்துக்குமாருப் புலவர்.

ஓம் சக்தி சக்தி சக்தியென்று சொல்லு கெட்ட
சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு
சக்தி சக்தி சக்தியென்று சொல்லி அவள்
சந்நிதியிலே தொழுது நில்லு
ஓம் சக்தியருளர் லுலகில் ஏறு ஒரு
சங்கடம் வந்தாலிரண்டு கூறு
சக்தி சில சோதனைகள் செய்தால் அவள்
தண்ணருளென் றேமனது தேறு.

## நால்வர் வயது

அப்பருக்கு எண்பத்தொன்று அருள்வாத வூரருக்கு
செப்பியநா லெட்டினில் தெய்வீகம் - இப்புவியில்
சுந்தர்க்கு மூவாறு தொன்ஞான சம்பந்தருக்கு
அந்தம் பதினா றறி.

## நால்வர் துதியும் திதியும்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூரர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

சித்திரைச் சதயமப்பர் சிறந்த வைகாசிமூலம்
அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்திலந்த
முத்தமிழ் வாதவூரர் முதியநல் லாடிதன்னில்
சுத்தமாஞ் சோதிநாளில் சுந்தரர் கைலைசேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரு திருமுறை பாடிய செல்வர்

திருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளிகைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளு பூந்துருத்தி நம்பி
வருஞான கண்டராதித்தர் வேணாட்டடிகள்
வாய்த்த திருவாலியமுதர்
மருவு புருடோத்தமர் சேதிராயர் மூலர்
மன்னு திருவாலவாயர்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடர் தாம்
ஒண்கபிலர் பரணர் மெய்யுணரிளம் பெருமானோ
டோங்கும் அதிராவடிகளார்
திருமேவு பட்டினத் தடிகளோடு நம்பியாண்டார்
நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண்டருள் செய்த
தெய்வீகத் தன்மையோரே.

## அறுபத்துமூவர் துதி

ஒப்பிலேனோடுயர்வு இகந்தவன்
உவந்தினி தருள
அப்புராதனன் தோழரும்
அருண் மொழிக் கவிஞன்
செப்பு மேன்மையின் ஒன்பதிற்று
எழுவர் செம்மலர்த்தாள்
வைப்பின் நாவினு மனத்தினுஞ்
சிரத்தினும் மணப்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்து மூதெயில் மூன்றுந் தழல் எழ
முத்து மூரல் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணைசேர் அறு
பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.

## சேக்கிழார் துதியும் திதியும்

தில்லைவாழ் அந்தணரே முதலாக சீர்படைத்த
தெல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடிபோற்றி.

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலுமப்பர்
நீடிய சித்திரைமாதச் சதய(ம்)நிறைவண் றொண்டர்
ஆடியிற் சோதி திருவாதவூரர் நல்லானிமகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப்பூசஞ் சிறந்தனரே.

## நம்பியாண்டார்நம்பி துதி

சீராருந் திருமுறைகள் கண்டதிறம் பார்த்திபனாம்
ஏராரும் இறைவனையும் எழிலாரும் நம்பியையும்
ஆராத அன்பினுடன் அடிபணிந்தங் கருள்விரவச்
சோராத காதல்மிகுந் திருத்தொண்டர் பதம்துதிப்பாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார்டிய யாரவர் வான் புகழ்
நின்ற தெங்கும் நிலவி உலகெலாம்.

தொண்டர்தம் பெருமை செல்லவும் பெரிதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாத் துயர்கொண் டடியேன் சலிப்ப
அது செவியில்
ஏறாம லேயிருந் தால்என்செய் வேன்? எங்கள்
ஈசற்கொரு
கூறாகி, யண்ட முதலாய், இளமை
குலவுதவப்
பேறாகி வாழ்பவளே, குன்றை வாழும்
பெரியம்மையே.

ஆய்முத்துப் பந்தரின் மெல்லணை
மீதுன் அருகிருந்து
''நீமுத்தம் தா'' வென்று அவர்கொஞ்சும்
வேளையில், நித்தநித்தம்
வேய்முத்தரோ(டு)என் குறைகள்
எல்லாம்மெல்ல மெல்லச் சொன்னால்
வாய் முத்தம் சிந்தி விடுமோ? நெல்
வேலி வடிவன்னையே.

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி;
உத்தரியத் தொடித்தோள் போற்றி;
கரும்புருவச் சிலைபோற்றி; கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி;
இரும்புமனம் குழைத்து, என்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம்பி ராட்டி
அரும்பும்இள நகைபோற்றி; ஆரணநூ
புரம் சிலம்பும் அடிகள் போற்றி.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போஸ்கோ பதிப்பகம் - நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org